முழுப்பதிப்புரிமையுடையது

**இலங்கைக் கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

**ஆரம்பப் பரீட்சை - 2014 யூலை**

## (53) வணிகக் கல்வி

Business Studies

2014.07.20
பிற்பகல்
2.00 – 4.00

**நேரம்: 02 மணித்தியாலம்**

பக்கங்களின் எண்ணிக்கை: 06
வினாக்களின் எண்ணிக்கை : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

(1) *இப்பத்திரம்* ***A, B*** *எனும் இரு (02) பகுதிகளைக் கொண்டது.*

(2) ***பின்வருமாறு ஐந்து (05) வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.***

- ***பகுதி A யின் வினா இல. 01***
- ***பகுதி B யிலிருந்து ஏதாவது நான்கு (04) வினாக்கள்***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *100 புள்ளிகள்.*

---

## பகுதி - A

பல்தேர்வு வினாக்கள்
இந்தப் பகுதியின் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
40 புள்ளிகள்

**01.** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் **மிகவும் சரியான விடையைத்** தரப்பட்டுள்ள (1), (2), (3), (4) என்னும் பதில்களிலிருந்து தெரிவுசெய்து உமது **விடைப்புத்தகத்தில்** வினாக்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களை எழுதி அவற்றிற்கு எதிரே தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை எழுதுக**.**

(A) பின்வருபவைகளுள் மனிதத் தேவைகளை (Human needs) மட்டும் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) உறைவிடம், உணவு, உடைகள்
(2) மின்சாரம், உணவு, உடைகள்
(3) போக்குவரத்து, தொடர்பாடல், கல்வி
(4) உறைவிடம், உடைகள், கல்வி

(B) பின்வருவனவற்றுள் ஒரு பொதுவான / இயங்கும் பங்காளர் (Active partner) தொடர்பாக **பிழையான** கூற்று எது?

(1) பங்குடமையின் நாளாந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவார்.
(2) பங்குடமையில் அவரது பங்கின் அடிப்படையில் பங்குடமையின் இலாபங்களில் அல்லது நட்டங்களில் பங்கினைப் பெறுவார்.
(3) அவர் ஒரு பங்காளர் என்பது பொதுமக்களுக்குத் தெரியாது.
(4) பங்குடமையின் பரிப்புகளுக்கு அவர் தனிப்பட்ட முறையில் பொறுப்புடையவராக இருப்பார்.

(C) வியாபாரமொன்று **வரையறுக்கப்பட்ட டிடுல பப்ளிகேசன் (தனியார்) நிறுவனம் (Didula Publication (Pvt) Ltd.** எனப் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகக் கருதிக்கொள்க. 2007 இன் கம்பனிச் சட்டம் இல. 07 இற்கிணங்க இந்தக் கம்பனியானது

(1) ஒரு வரையறுத்த பொதுக் கம்பனி (A Public Limited Company).
(2) ஒரு பட்டியலிடப்பட்ட வரையறுத்த பொதுக் கம்பனி (A Listed Public Limited Company).
(3) வரையறுத்த தனிப்பட்ட கம்பனி (A Private Limited Company).
(4) உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனி (A Company Limited by Guarantee).

(D) பின்வருவனவற்றுள் ஒரு கைமாற்றத்தக்க சாதனம் (negotiable instrument) எது?

(1) மாற்றுண்டியல் (2) வங்கி உடனுண்டியல்கள் (Bank draft)

(3) *பங்குச் சான்றிதழ்* (4) காசுக் கட்டளை

(E) இலங்கையில் படிம தீர்த்தல் முறைமை (Image clearing System) யாரால் செயற்படுத்தப்படுகின்றது?

(1) வரையறுக்கப்பட்ட லங்கா கிளியர் (தனியார்) நிறுவனம் (Lanka clear (pvt) Ltd.)

(2) பிணைகள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழு (Securities and Exchange Commission)

(3) இலங்கை வங்கி (Bank of Ceylon)

(4) கொழும்பு பங்குப் பரிமாற்றகம் (Colombo Stock Exchange)

(F) பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மேற்பார்வை செய்யப்படுவது,

(1) பிணைகள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழுவினால்

(2) இலங்கை மத்திய வங்கியினால்

(3) இலங்கை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால்

(4) கொழும்பு பங்குப்பரிமாற்றகத்தினால்

(G) *ஏற்றுமதிச் செயன்முறைப்படுத்தல் வலயங்களில்* (EPZ) வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள முயற்சியாளர்கள் (Entrepreneurs) விசேட ஊக்குவிப்புகளுக்கு உரித்தானவர்கள் ஆவர். அத்தகைய முயற்சியாளருக்கு EPZ இனால் **வழங்கப்படாத** ஊக்குவிப்பு ஒன்றை பின்வருவன வற்றிலிருந்து தெரிவுசெய்க.

(1) 100% வெளிநாட்டு முதலீடுகளுடனான முதலீட்டுச் செயல்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு வாய்ப்புகளை வழங்குதல்

(2) அனைத்து ஊழியர்களுக்குமான சம்பளக் கொடுப்பனவுகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்படல்

(3) உபகரணம், கட்டுமான மூலப்பொருட்கள் மற்றும் எல்லா உற்பத்தி உள்ளீடுகளுக்கும் இறக்குமதி வரிகளிலிருந்து விலக்களிக்கப்படல்

(4) பங்குதாரர்களுக்குச் செலுத்தப்படும் பங்கிலாபத்திற்கு வரி விலக்களிக்கப்படல்

(H) பின்வருவனவற்றுள் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் (Industrial Development Board) **வழங்கப்படாத** ஒரு சேவை எது?

(1) சிறிய மற்றும் நடுத்தர துறைசார் தொழில் முயற்சிகளுக்காக தொழில்நுட்ப வசதிகளை வழங்குதல்

(2) பயிற்சி வசதிகளை வழங்குதல் (Offering training facilities)

(3) குறைந்தளவு கிரயமுடைய தயாரிப்பு முறைகளை அறிமுகப்படுத்தல்

(4) மீள்நிதியளிப்பு கடன் திட்டங்களை ஏற்பாடுசெய்தல்(Providing re-finance loan schemes)

(I) காப்புறுதி செய்யத்தகாத இடருக்கான (non-insurable risk) ஒரு உதாரணமாவது,

(1) ஆள் ஒருவரின் உயிர்

(2) ஒருவருக்கு சொந்தமான ஒரு சொத்து

(3) தொழில்நுட்பவியல் கண்டுபிடிப்புகளிலிருந்து எழுந்த நட்டங்கள்

(4) வியாபார அமைவிடங்களில் நிகழ்ந்த தீ விபத்தினால் ஏற்பட்ட நட்டங்கள்

(J) மீயுயர் நம்பிக்கைக் கோட்பாட்டின் கீழ் (Principle of utmost good faith) ஆயுள் காப்புறுதியில் **வெளிப்படுத்தக்கூடாத** விடயங்கள்,

(1) உத்தேசிக்கப்பட்ட ஆயுட்காலம் (2) தங்கியிருப்போர் பற்றிய தகவல்

(3) காப்புறுதியின் அனுகூலங்கள் (4) காப்புறுதிப் பத்திரத்தின் முதிர்வுத் திகதி

(K) வங்கியிடை அழைப்புப் பணச்சந்தை (inter-bank call money market) தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

**(a)** நம்பிக்கையின் அடிப்படையில் ஒரு வங்கியிடமிருந்து இன்னொரு வங்கி பெறும் குறுங்காலக் கடன் (Short term borrowing)

**(b)** அனுமதி பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் அனுமதி பெற்ற விசேடத்துவ வங்கிகள் ஆகிய இரண்டும் அழைப்புப் பணச் சந்தையின் நடவடிக்கைகளில் பங்கேற்றல்

**(c)** மிகை நிதிகளைக் கொண்ட வங்கிகள் வழங்குநர்களாகவும் குறை நிதியுடைய வங்கிகள் கடன் பெறுநர்களாகவும் செயல்படுதல்

(1) **(a)** யும் **(b)** யும் மட்டும் (2) **(b)** யும் **(c)** யும் மட்டும்

(3) **(a)** யும் **(c)** யும் மட்டும் (4) மேலேயுள்ள யாவும்.

(L) நீங்கள் வட்டி வருமானத்தைச் சம்பாதித்து உயர்மட்டப் பாதுகாப்புடனான திரவத்தன்மையைச் சம்பாதிக்க விரும்பினால் அதற்கு மிகவும் பொருத்தமான நிதிச்சாதனம் பின்வருபவைகளுள் எது?

(1) தனிச்சங்கள் (Debenture)

(2) திறைசேரி உண்டியல் (Treasury bills)

(3) அலகு நம்பிக்கைப் பொறுப்பாட்சிகள் (Unit trust)

(4) பங்கு வார்நாமம் (Share warrant)

(M) பின்வருவனவற்றுள் மூலதனச் சந்தையின் ஒரு நிறுவனம் **அல்லாதது** எது?

(1) அலகு நம்பிக்கைப் பொறுப்பாட்சிகள் (Unit trusts)

(2) காப்புறுதி நிறுவனங்கள் (Insurance institutions)

(3) அடகு பிடிப்போர் (Pawn brokers)

(4) தொழில் முயற்சி மூலதனக் கம்பனிகள் (Venture capital companies)

(N) வெகுமதிப் பங்குகளைப் (Golden Shares) பொறுத்தமட்டில் பின்வருபவைகளுள் சரியானது எது?

(1) இது விசேட கட்டுப்பாட்டு அதிகாரத்துடனான ஒரு வகை சாதாரண பங்கு ஆகும்.

(2) கம்பனியை தாபிப்பவர்களுக்கு (Promoters) இவை விநியோகிக்கப்படும்.

(3) ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தும் உரிமை இப்பங்குகளுக்கு உண்டு.

(4) மேலே கூறப்பட்ட யாவும்.

(O) கப்பற் போக்குவரத்துக் கம்பனி ஒன்றினால் பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமையையும் பயண முடிவில் பொருட்கள் சேர்ப்பிக்கப்படுவதையும் சான்றுப்படுத்திடத் தயாரிக்கப்படும் ஆவணமாவது,

(1) இறக்குமதி நுளைவு (Import Entry) (2) கப்பலேற்று வார்நாமம் (Bill of Lading)

(3) விநியோகக் குறிப்பு (Delivery Note) (4) விலைக்கூற்று (Invoice)

(P) "இருப்பு முடக்கம் (Dumping) என்பதனால் கருதப்படுவது யாது?

(1) சந்தையில் உயர் விலையைப் பேணுவதற்காக உற்பத்தியாளர்களால் மிகை உற்பத்தி அழிக்கப்படல்

(2) உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை அவற்றின் உற்பத்திக் கிரயத்தை விட குறைந்த விலைகளில் வெளிநாடுகளில் விற்பனை செய்தல்

(3) உற்பத்தியாளர்கள் தமது பொருட்களை, தமது சொந்த நாட்டில் நடைமுறையிலுள்ள விலைகளிலும் பார்க்க குறைவான விலைகளில் வெளிநாடுகளில் விற்பனை செய்தல்

(4) மேலே கூறப்பட்ட எவையுமன்று.

(Q) சர்வதேச வர்த்தகத்திலிருந்து கிட்டுகின்ற ஒரு நன்மை

(1) உலகின் பொருட்கள் மற்றும் சேவைகளின் வெளியீடுகளில் அதிகரிப்பு

(2) உலகின் வரையறுக்கப்பட்ட வளங்களின் பயன்பாட்டில் ஒரு பாரிய வினைத்திறன் காணப்படல்

(3) உலகம் முழுவதிலும் உயர்ந்த வாழ்க்கைத் தரம் ஏற்படல்

(4) மேற்கூறிய யாவும்.

(R) சென்மதி நிலுவைக் கூற்றின் நிதிசார் கணக்கில் (financial account) உள்ளடக்கப்படுவது பின்வருபவைகளுள் எது?

(1) சேவை வருமானம் (Service income)

(2) நேரடி முதலீடுகள் (Direct investment)

(3) பொருட்கள் ஏற்றுமதியிலிருந்து கிட்டும் வருமானம் (Income from export of goods)

(4) பெறப்பட்ட தனியார் பணம் அனுப்புதல்கள் (Private remittances received)

(S) ஒரு நாணயம் தொடர்பில் இன்னொரு நாணயத்தின் பெறுமதியில் ஏற்படும் உயர்ச்சி

(1) நாணயத்தின் பெறுமதி இறக்கம் (devaluation)

(2) நாணயத்தின் பெறுமதி ஏற்றம் (appreciation)

(3) நாணயத்தின் தேய்மானம் (depreciation)

(4) நாணயம் பலமிழத்தல் (weakening of the currency)

(T) கீழ்வருவனவற்றுள் தெற்காசிய முன்னுரிமை வியாபார உடன்படிக்கைக்கு (South Asian Preferential Trade Agreement - SAPTA) **உரித்தல்லாத** நாடு எது?

(1) இலங்கை (2) பங்களாதேஷ்

(3) ஆப்கானிஸ்தான் (4) மியன்மார்

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

## பகுதி - B

இப்பகுதியிலிருந்து எவையேனும் **நான்கு (04) வினாக்களுக்கு** விடையளிக்குக.
60 புள்ளிகள்

**02.** (a) இலங்கையில் கைத்தொழில்களை மேம்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டின் அரசாங்க பாதீட்டினால் (Government budget) வழங்கப்பட்ட ஊக்குவிப்புகள் எவை? (06 புள்ளிகள்)

(b) ஒரு பங்குடமை வியாபாரத்துடன் ஒப்பிடுகையில் தனியுரிமை வியாபாரம் ஒன்றின் பிரதிகூலங்கள் **ஐந்தினைப்** (05) பட்டியலிடுக. (05 புள்ளிகள்)

(c) "வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு அல்லது விரிவுபடுத்துவதற்கு பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் (limited liability companies) பிரதான நிதி மூலம் (main source of finance) பங்குகளை விநியோகிப்பதிலிருந்தே வருகின்றது.

பின்வரும் பங்குகளின் வகைகளை சுருக்கமாக விளக்குக.

(i) திரள் முன்னுரிமைப் பங்குகள் (Cumulative preference shares)

(ii) நிறுவுனர் பங்குகள் (Founders shares) (04 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**03.** (a) இலங்கையில் கைத்தொழில்களை மேம்படுத்துவதற்காக இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் (Sri Lanka Export Credit Insurance Corporation) வழங்கப்படும் வசதிகள் யாவை? (05 புள்ளிகள்)

(b) மோட்டார் வாகன காப்புறுதிப் பத்திரங்கள் தொடர்பில் பின்வருபவைகளைச் சுருக்கமாக விளக்குக.

(i) மூன்றாம் தரப்பு காப்புறுதிப் பத்திரம் (3rd party insurance policy)

(ii) அனைத்தையும் உள்ளடக்கிய காப்புறுதிப் பத்திரம் (Comprehensive / Full insurance policy) (06 புள்ளிகள்)

(c) தனியார் காப்புறுதிக் கம்பனிகளால் பின்பற்றப்படும் நிபந்தனைகள் **இரண்டினைக்** (02) குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**04.** (a) இலங்கைப் பொருளாதாரத்தின் அபிவிருத்திக்காக ஒரு வினைத்திறனான பணச் சந்தை (an efficient money market) மற்றும் மூலதனச் சந்தை (capital market) களைக் கொண்டிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விபரிக்குக. (07 புள்ளிகள்)

(b) வரையறுக்கப்பட்ட மத்திய வைப்பு முறைமைகள் (தனி.) கம்பனியின் (CDS) **நான்கு** (04) பிரதான செயற்பாடுகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(c) மூலதனச் சந்தையின் அபிவிருத்திக்காக அண்மையில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் **இரண்டினைப்** (02) பட்டியலிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**05.** (a) ஒரு குறுக்குக் கோடிட்ட காசோலை (Crossed Cheque) என்பதனால் கருதப்படுவது யாது? பிரதான குறுக்குக் கோடிடல் வகை ஒவ்வொன்றுக்கும் **இரண்டு** (02) உதாரணங்கள் வீதம் தருக. (06 புள்ளிகள்)

(b) (i) காசோலை ஒன்றின் மறுதலிப்பு (dishonour of a cheque) என்பதனாற் கருதப்படுவது யாது?

(ii) காசோலை ஒன்றின் மறுதலிப்பிற்கான காரணங்கள் **மூன்றினைக்** (03) கூறுக. (05 புள்ளிகள்)

(c) வர்த்தக வங்கி ஒன்றினால் காசோலை ஒன்றை மறுதலிப்பது பற்றிய குறிப்புகள் (Remarks) **இரண்டு** (02) கீழே தரப்பட்டுள்ளன.

(i) வரையுநரின் கவனத்திற்கு கொண்டுசெல்க (Refer to Drawer)

(ii) விளைவுகள் தேறவில்லை (Effects not Realized)

மேலே கூறப்பட்ட **இரண்டினைப்** (02) பற்றியும் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**06.** (a) தாராள வர்த்தகத்திற்கு எதிராக நாடுகள் வர்த்தகத் தடைகளை (Trade barriers) விதிப்பது ஏனென்பதைச் சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(b) "நிலையான நாணயமாற்று வீதத்தின்" (Fixed exchange rate) **ஐந்து** (5) பிரதிகூலங்களைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(c) சர்வதேச வர்த்தகம் தொடர்பில் பின்வருவனவற்றைச் சுருக்கமாக விபரிக்குக.

(i) வர்த்தக உடன்படிக்கைகள் (Trade agreements)

(ii) தீர்வை சாராத வர்த்தகத் தடைகள் (Non-tariff trade barriers) (04 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**07.** பின்வருபவைகள் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

(a) கிடப்பு நாட்கள் (Lay Days)

(b) குறிப்பிடு மூலதனம் (Stated Capital)

(c) வெற்றுப் புறக்குறிப்பு (Blank Endorsement)

(d) கோரிக்கை விடாதமைக்கான உபகாரக் கொடுப்பனவு (No claim bonus)

(e) அன்னியச் செலாவணியின் மிகை மதிப்பீடு (Over Value of Foreign Exchange)

(ஒவ்வொன்றுக்கும் 03 புள்ளிகள் வீதம் மொத்தம் 15 புள்ளிகள்)

- o0o -